முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 737**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.10.2021, செவ்வாய்கிழமை

1. ஞான சூட்சுமமே அரங்கா வாழ்க
ஞான மகா சக்தியே தேசிகா வாழ்க
ஞானபண்டிதன் யானும் அரங்கன் உமக்கு
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
2. ஆசிதன்னை பிலவ நங்கை திங்களில்
அரங்கன் நீ கேட்க அருளுவேன்
வாசிவென்ற தலைவர் பெருமக்கள் வல்லமைபட சூட்சும சக்தியாக
ஆசி தந்து உந்தனுள் இணைந்து அகிலத்தை மாற்ற துணையாய் நிற்க
3. நிற்கவே வடிவேலன் யானும் மகிழ்ந்து
நின்சக்திக்குள் மகா சக்தியாக
அற்புதம் நடத்தி நித்தம்நித்தம்
அரங்கனுக்கு வரங்கள் பல ஈந்து வருகின்றேன்
4. வருகவே அரங்கன் தொடர்புகொண்ட
வையகத்தாரை கொண்டே இந்த உலகத்தை
பெருமைமிக்க ஞான லோகமாக
பிரளயத்தையே வெல்லுகின்ற மகாசக்திமிகுயுகமாக
5. ஆகவே மாற்றி அற்புதம் நிகழ்த்துவேன்
அரங்கன் தர்மத்தால் இந்த மாற்றத்தை
மிகைபட ஆறுமுகன் யான் உலகமாற்றமாக
மக்களிடை நடத்தி மகிழ்விப்பேன்
6. மகிழ்வுற அரங்கனே கலியின் சிறந்த தவசி
மக்களை காக்க வந்த மகா ஞானி
அகிலத்தார் இந்த சூட்சுமம் அறிந்தால் போதும்
அன்றே உலகம் ஞான ஆட்சி பெறும்
7. ஆட்சிபெறும் அரங்கன் கொள்கை கொண்டே
அகிலம் அமைதியும் பாதுகாப்பும்
வரமென எல்லா வளமும் பெறும்
வழங்கினேன் அரங்கன் வழி உலக மக்கள் வரவேண்டி

8. வேண்டிவேண்டி அரங்கன் தொடர்பு கொண்டு
வினைவெல்லும் தர்மத்தை தொடர்ந்து செய்து
தொண்டரென அரங்கர் படை பெருகபெருக
தேசிகன் மூலம் இந்த அற்புதத்தை ஆறுமுகன் நடத்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–